**திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை – திரு.இரா.இராம்பிரதீபன், பி.இ.**

நக.அ3/2272279/2024 நாள்.05-05-2025.

பொருள் பயிற்சி - அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர் - திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலகு - இளநிலை வருவாய் ஆய்வாளர்/ முதுநிலை வருவாய் ஆய்வாளர்களுக்கான 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி – 68-வது அணி 29.05.2025 முதல் 16.07.2025 முடிய நடைபெறும் பயிற்சியில் கலந்து கொள்ள 05-பணியாளர்களை 27.05.2025 பிற்பகல் விடுவித்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை
1. ஈரோடு மாவட்டம், பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், மாவட்ட வருவாய் அலுவலர்/ முதல்வர் அவர்களின் கடித எண்- ந.க.எண். அ3/1588/2025. நாள்-30.04.2025
2. தொடர்புடைய ஆவணங்கள்.

>>>>>....<<<<<

**ஆணைகள் -**

திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலகில், இளநிலை வருவாய் ஆய்வாளர்களாக பணிபுரிந்து வரும் கீழ்க்குறிப்பிட்டுள்ள 05–பணியாளர்களை பவானிசாகர், அடிப்படை பயிற்சி நிலையத்தில் அணி எண் 68-ல் 29.05.2025 முதல் 16.07.2025 வரையில் 41 பணி நாட்கள் நடைபெறும் இளநிலை வருவாய் ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொள்ளும் பொருட்டு 27.05.2025 பிற்பகல் திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலகு பணியிலிருந்து விடுவித்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் / பதவி / அலுவலக முகவரி | பணியில் சேர்ந்த நாள் | நியமன முறை |
|---|---|---|---|
| 1) | ஆ.ஜீவிதா<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>திருவண்ணாமலை | 11.03.2024 மு.ப | பதவி உயர்வு |
| 2) | க.சச்சிதானந்தம்<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்,<br>சார் ஆட்சியர் அலுவலகம்,<br>செய்யாறு | 11.03.2024 மு.ப | பதவி உயர்வு |
| 3) | கி.தனசேகர்<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,<br>திருவண்ணாமலை | 11.03.2024 மு.ப | பதவி உயர்வு |

| | | | |
|---|---|---|---|
| 4) | மு.இளையராஜா<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்ட வழங்கல் அலுவலகம்<br>திருவண்ணாமலை வட்டம். | 11.03.2024 பிப | பதவி உயர்வு |
| 5) | தீ.செந்தமிழ்ச்செல்வன்<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>கீழ்பென்னாத்தூர் | 08.07.2024 முப | நேரடி நியமன உதவியாளர் |

2) மேற்படி பயிற்சிக்கு செல்லும் நபர்கள் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம்/ அடையாளச் சான்றுடன் கூடிய அசல் பணி விடுவிப்பு ஆணை/ ஒப்பந்தப் பத்திரம்/ ஆதார் அட்டை நகல்/ ஆகிய ஆவணங்கள் அனைத்தும் தயார் செய்து பயிற்சிக்கு செல்லும் போது சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்கள் உடன் கொண்டு செல்ல வேண்டும்.

3) மேற்படி பயிற்சிக்கு செல்லும் நபர்கள் பயிற்சியில் சேர்வதற்கு முன் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் அனைத்தும் அடங்கிய இணைப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர்கள் அனைவரும் மேற்படி பயிற்சிக்கு இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருட்களை கட்டாயமாக கொண்டு செல்ல வேண்டும் என்றும், மேற்படி இணைப்பில் கண்டுள்ள வழிமுறைகளை தவறாமல் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

4) 28.05.2025 அன்று முற்பகல் 09.00 மணிக்கு பயிற்சி நிலையத்தில் ஆஜராக வேண்டிய பயிற்சியாளர்கள் மேற்படி பயிற்சிக்குண்டான கட்டணம் ரூ.11535/- பயிற்சி நிலைய இணையதளத்தின் (www.cstibhavanisagar.in->Online Admission) வாயிலாக 05.05.2025 அன்று காலை 09.00 மணி முதல் 14.05.2025 அன்று மாலை 05.00 மணி வரையில் பயிற்சியாளர்கள் தங்களது விபரங்களை பதிவேற்றம் செய்து பயிற்சி கட்டணத்தை இணைய வழியாக மட்டுமே செலுத்த வேண்டும். தொகை செலுத்திய **UTR** எண்ணை முகப்பு விண்ணப்பத்தில் மறவாமல் குறிப்பிட வேண்டும். தொடர்புடைய ஆவணங்கள் பதிவிறக்கம் செய்வது மற்றும் கையொப்பம் பெறுவது (பதிவிறக்கம் செய்து அதில் அலுவலரின் சான்றொப்பமிட்டு உடன் கொண்டு வருதல் வேண்டும்) தொடர்பாக கொடுக்கப்படும் வழிமுறைகளை பதிவேற்றம் தொடர்பான வழிமுறைகளுக்கு இணையதளத்தை பார்க்கவும்) தவறாமல் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

5) மேற்படி பயிற்சிக்கு செல்லும் பணியாளர்கள் 28.05.2025 அன்று முற்பகல் 9.00 மணிக்குள் பவானிசாகர், அடிப்படை பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளர் சேர்க்கை பணி நடைபெறும் இடமான டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் கலையரங்கத்தில் தவறாமல் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6) மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்களை மேற்கண்ட பயிற்சிக்கு செல்லும் பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து விடுவித்த தகவலை உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட சார்நிலை அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு -மேற்கண்டவாறு

ஒம்/-இரா.இராம்பிரதீபன்
மாவட்ட வருவாய் அலுவலர்
திருவண்ணாமலை.

//உத்தரவுப்படி//

05/05/25

மாவட்ட வருவாய் அலுவலருக்காக/
மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது).
திருவண்ணாமலை.

பெறுநர்-

05.05.25

சம்மந்தப்பட்ட பணியாளர்கள்

நகல்- மாவட்ட வருவாய் அலுவலர் / முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம்-638451(*பதிவஞ்சலில்*)

நகல்- சார் ஆட்சியர், செய்யாறு

நகல்- வருவாய் கோட்டாட்சியர், திருவண்ணாமலை

நகல் -வட்டாட்சியர், திருவண்ணாமலை/கீழ்பென்னாத்தூர்

நகல் -தனி வட்டாட்சியர்(கு.பொ) திருவண்ணாமலை.

நகல்- திருவண்ணாமலை, மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நேர்முக எழுத்தர்.